Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 வைகாசி 30 ( 13 - 06 - 1991 ) வியாழக்கிழமை ஓசை: 115

## பல்கலைக்கழக அனுமதியில் மாற்றம்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதி விதிகளில் விரைவில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன இதனால் வருமானம் குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களும் மற்றும் வசதிகள் குறைவான பள்ளிக்கூட மாணவர்களும் நன்மை பெறுவார்கள். கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அதுலத்முதலியின் மேற்படி திட்டம் அர (6ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்குதல்களின் மூலமாக எம்மை அடக்கிவிட முடியாது


## முத்தமிழ் விழா ஏழாம் நாள் நிகழ்ச்சியில் பரிசுகளை வழங்கி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா உரை

(நமது நிருபர்)

"நெருக்குதல்களின் மூலம் எங்களை அடக்கிவிடலாம் என்று நினைக்கும் ஆக்கிரமிப்பாளனுக்கு, அந்த நெருக்குதல்களுக்கு நடுவேயும் எங்களால் பாடமுடியும்; எங்கள் தனித்துவங்களை பாதுகாக்க முடியும் என்பதை இந்தவிழா தெளிவுபடுத்தும்."

இவ்வாறு நெல்லியடியில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவின் ஏழாம் நாள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மாவீரர் நாளையொட்டி நடந்த போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களை வழங்கி உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவருமாகிய திரு. கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

அவரது உரையின் முழுவிபரம் வருமாறு:-



அன்பான தமிழீழ மக்களே!

இந்த மண்ணில் - மனித இனத்தின் தோற்றம், எங்கள் மூதாதையினரின் வாழ்வுத் தொடரிலேயே ஆரம்பமாகியது. அழகான எமக்கென மொழிக்கும் - இனத்திற்கும், பெருமைக்குரிய நீண்ட வரலாறு இருக்கிறது எங்கள் மொழியின் பெருமைக்காகவும் வாழ்வுக்காகவும் எமது கலை (6ஆம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழா 7 ஆம் நாள்

(நெல்லியடி)

முத்தமிழ் விழாவின் ஏழாவது நாள் நிகழ்ச்சிகள் நேற்று நெல்லியடி மாவீரர் கலையரங்கில் பெருந்திரளான ஜனசமுத்திரத்தினூடே நடைபெற்றது. வீதிகள் தோறும் அலங்கார வளைவுகளும் வீதிகளைமூடி மலர்ப்பந்தர்களும் அமைக்கப்பட்டு வாழைகள் கட்டப்பட்டிருந்தன.

நெல்லியடியில் இறுதி நாள் நிகழ்ச்சியாக நேற்று நடைபெற்ற முத்தமிழ் விழாவினை மாலை 7 மணியளவில் விழ (6 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னொளி, மாதிரிக் கோட்டை, சிகரங்கள்

# கோட்டைப் பகுதியெங்கும் பெரும் விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)

"நடந்துகொண்டிருக்கும் முத்தமிழ் விழா நிகழ்ச்சியின் இறுதி மூன்றுநாள் நிகழ்ச்சிக்குமாக யாழ். முற்றவெளி மைதானமும், யாழ் நகரமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் களை கட்டி நிற்கிறது.

வீதிகளை வளைத்து தோரணப்பந்தர்களும், சிகரங்களும் சோடனைகளும் யாழ் நகரமெங்கும் சுவர்க்கம் போல சோடனை செய்யப்பட்டுள்ளது.

யாழ். வைத்தியசாலை வீதியிலிருந்து முற்றவெளி மைதானம் வரை அனைத்து வீதிகளிலும் இடைவெளியின்றிப் பஞ்சவர்ண தோரணங்கள் கட்டி வீதியை வளைத்துக் கொட்டகை போட்டதுபோல வர்ணஜாலம் காட்டி நிற்கின்றது.

கோட்டையைச் சுற்றியுள்ள வீதி இருமருங்கிலும் வளை கட்டிப் புதிய முறைகளில் சோடனை செய்யப்பட்டுள்ளது. கோட்டையின் வாசலை (6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### லெப். சூரி ரசீத்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அரியகுண்டான் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் லெப். சூரி (முல்லைத்தீவு), ரசீத் (விசுவமடு) ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

தேசம் பிறப்பதற்கு தெள்ளுதமிழ் கலைகள்
தூணாய் துணைநின்று துலங்குமென
பாசத் தலைவன் பகன்றான் பக்குவமாய்
காணக் கண்கொள்ளா கலைவிழா
நாளும் நலம்பெற நாம் வாழ்த்துக்
கூறுகின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## மனித உரிமைகள் பற்றி சோசாகுழு கண்காணிக்கும்

(கொழும்பு)

மனித உரிமைகள் செயலணிக்குழு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் அடிப்படை உரிமைகள் பற்றிக் கண்காணிக்கும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சோசா தலைமையிலான குழுவிற்கு இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக சாம் விஜேசந்திரா, விஜெநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் அமைப்பினால் காணாமற் போனவர்கள் பற்றித் தரப்படும் முறைப்பாடுகளும், உள்ளூரில் காணாமற் (6ஆம் பக்கம் பார்க்க)

## பெரியகட்டுமுனையில் மூன்று தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியகட்டுமுனை என்னும் கிராமத்தை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து பல அப்பாவித் தமிழ் மக்களை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7.00 மணியளவில் வாகரைப் பகுதியிலுள்ள பனிச்சங்கேணி (6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கலந்து கொள்ளாத பேச்சினால் பலனில்லை

- சபாநாயகர் முஹம்மது

(மட்டக்களப்பு)

பலம்பொருந்திய தீவிரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் எதுவித பயனும் கிட்டப்போவதில்லை என பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முஹம்மது தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் (6ஆம் பக்கம் பார்க்க)

## என்னை வெளியேற்றியதை நியாயப்படுத்த முடியாது

-டேவிட் கிளாஸ்ரோன்

(கொழும்பு)

"இலங்கையை விட்டுச்செல்லுமாறு சிறிலங்கா அரசாங்கம் என்னைக் கேட்டுக்கொண்டது எந்தவிதத்திலும் நியாயப்படுத்தக்கூடிய ஒரு நடவடிக்கை அல்ல" என்று முன்னாள் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் டேவிட் கிளாஸ்ரோன் தெரிவித்துள்ளார்.

இலங்கையை விட்டு மாலைதீவிற்குச் செல்ல முன்னர் கொழும்பில் அவர்விடுத்துள்ள அறிக்கை யொன்றில் இலங்கையை விட்டுச் செல்ல வேண்டியிருப்பது தனிப்பட்ட முறையில் எனக்கு பெருங்கவலையை அளிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைத் தமிழர்களான தாயும் மகனும் கைது

ராஜீவ்காந்தி கொலைப்பட்ட குண்டு வெடிப்பு சம்பந்தமாக தமிழ்நாடு செங்கல்பட்டு மாவட்டத்தில் வைத்து இலங்கைத் தமிழர்களான ஒரு தாயும் மகனும் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாக்கியநாதன் என்னும் பெயருடைய 25 வயது இளைஞர் ஒருவரும் அவரது தாயாரான பத்மா என்பவரும் கைது செய்யப்பட்டு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களிருவரையும் முப்பது நாட்கள் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆங்கில மொழி

## மேலை இசை போதிக்க 3350 ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

ஆங்கிலமொழி மேலைத் தேச இசை ஆகியவற்றை போதிப்பதற்காக 3350 ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப் படுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் மூவாயிரம் பேர் ஆங்கில மொழியைக் கற்பிப்பவர்கள் என்றும் ஆசிரியர்களை நியமிப்பதற்காக கல்விச் சேவைகள் குழு எற்கனவே விண்ணப்பங்களைக் கோரியுள்ளது என்றும் கூறப் படுகிறது

ஆங்கில ஆசிரியர்களுக்கான எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும் என்றும் மேலைத்தேச இசைக்கான ஆசிரியர்கள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் கல்விச் சேவைகள் குழு அறிவித்துள்ளது

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 - 11 - 1974 | 30 - 04 - 1991 |

திதி; 13-06-1991

**வீரவேங்கை சிவப்பிரகாசம் ஸ்ரீசாந்தன்**

தென்றலென நம் மடியில்
தவழ்ந்த சிறு மழலை
புயலைப் பிறப்பித்த
கதையறிந்து மகிழும் வேளை
ஆவி தந்தான் தாயக விடியலுக்கு
என அறிந்தோம் -- அந்தோ
பாவி மனம் பதறுதே
பைந்தமிழின் விடுதலையை
பாருலகம் அறியட்டும்
திக்கெட்டும் முழங்கட்டும்
செந்தமிழின் வீரம்.

உன் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

ஆடியபாத றோட்,
கோணாமலை, கொக்குவில்.

(B/ 2655)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**கர்ணன்**
**(வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன்)**

| தாயின் மடியில் | தாயக விடிவில் |
|---|---|
| 12-07-1972 | 16 03-1991 |

இருபது ஆண்டும் நிறையாப்
பருவமதில்
சிங்களத்தின் பகை படக்க
செங்களமாடிய தீரனே!
எங்கள் குலக் கொழுந்தே!!
தாயகம் விடியும் -
தமிழர் தலை நிமிரும் -
அது வரையில் அமைதிகொள்!

இவர் ஆனையிறவில் ஏற்பட்ட மோதலில்
வீரமரணம் அடைந்தார்.


தப்பாசமம்,
டனைவு

- தாய், சகோதரர்கள்,

(R/ 1450)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 06 - 13



ராவ்
முகம்மது ரபீக் - பொத்துவில்

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் புல்லுமலையில் தவறுதலான துப்பாக்கிச் சூட்டினால் எமைப்பிரிந்த

**வேல்** (குமாரவேல் - கோப்பாவெளி)

1987ஆம் ஆண்டு. பொலிகண்டி உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்ட பொதுமகன்

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன்

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன்

1989ஆம் ஆண்டு இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமெய்திய

**கேதீஸ்** (குணசேகரம் - ஏறாவூர்)

1990ஆம் ஆண்டு லகுகலவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த

**டேவிட்** (சதிரவன் இராஜேந்திரன் - பொத்துவில்)

**ராவ்** (முகமது ரபீக் - பொத்துவில்)

பாணமையில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரமரணமடைந்த

**ஜோண்சன்** (பொத்துவில்)

**குயிலன்** (பதுளை)

**அன்வர்**

இறக்காமத்தில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

**சாந்தன்** (சேனைக்குடியிருப்பு)

களுவாஞ்சிக்குடி முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**தமேஸ்** (அக்கரைப்பற்று)

**மொனரா** (யோ. பொற்செல்வன் - மண்டூர்)

**மோகனராஜ்** (சந்திரசேகரம் - 37ஆம் கிராமம்)

கல்முனை முகாம் இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**குபீர்** (கோளாவில், அக்கரைப்பற்று)

கும்புறுமூலை இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப்.றொமி** (நா. சகாதேவன் - கொடுவாமடு)

**ஜிவ்றி** (முகம்மது இலியாஸ் - ஒட்டமாவடி)

சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் வீரமரணமடைந்த

**இன்பன்** (அக்கரைப்பற்று)

**சதீஸ்** (அக்கரைப்பற்று)

**குமரேசன்** (பாலையடிவெட்டை)

**2ஆம்லெப்.சங்கிலி** (ச. சதீஸ்குமார் - திருக்கோணமலை)

**அருண்** (ச. வீரசிங்கம் - பன்குளம்)

**சீனு** (ச. கலைச்செல்வம் - கிண்ணியா)

**சுகந்தன்** (ஹேமாங்கதன் - திருக்கோணமலை)

**மகான்** (சிவகுமார்)

**கமலன்** (மூதூர்)

**லெப்.ரஞ்சன்** (வே. சண்முகநாதன் - சன்னாசி, பரந்தன்)

**தர்ஷன்** (அப்துல்காதர் சமில்)

**கப்டன் ஜெகன்** (க. இலட்சுமணன் - பன்குளம்)

அம்பாறை டி. டி. சி. தமிழ்க்கிராமம் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பெண்கள், குழந்தைகள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

(B- 2656)

பஞ்சாப் தேர்தலை

# இந்திய, மார்க்சிய கம்யூனிச கட்சிகள் பகிஷ்கரிக்கின்றன

(டெல்லி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் பஞ்சாப் தேர்தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளன.

இப்போதைய சூழ்நிலையில் வரும் 22ஆம் திகதி பஞ்சாபின் வாக்கெடுப்பு நடத்துவது ஜனநாயகத்தைக் கேலி செய்வதாகும் என்று மேற்படி கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

இரு கட்சிகளும் ஆலோசனை கலந்து பஞ்சாப் வாக்கெடுப்பைப் பகிஷ்கரிப்பதாக முடிவெடுத்துள்ளன.

இதேவேளை, இந்திரா காங்கிரஸ் தலைவர் பி.வி. நரசிம்மராவ், இன்றைய நிலையில் பஞ்சாபில் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது என்று புவனேஸ்வரி செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுவரை 22 வேட்பாளர்கள் பஞ்சாபில் கொலை செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலின் போது 62,000 பராதுருப்புக்கள் பஞ்சாப்பில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் என்று டெல்கி அறிவித்துள்ளது.

இரண்டாம் கட்ட தேர்தல்

# 113 மக்கள் அவையில் 1853 வேட்பாளர்கள்

(டில்லி)

இந்தியாவில் நேற்று இடம்பெற்ற இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் 113 மக்கள் அவைத்தொகுதிகளுக்கு, 1853 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் நின்றனர்.

ஏறத்தாள பத்துக் கோடி வாக்காளர்கள் தமது வாக்குகளை அளித்துள்ளனர். இந்தத் தேர்தலில் முன்னாள் அமைச்சர்கள் மது தண்டவதே, வசந்த் சுட்டே, பூட்டாசிங், ராம் விலாஸ் பாசுவான் ஜனார்த்தன் ரெட்டி, உன்னிகிருஷ்ணன் ஆகியோர் தமது தேர்தல் வெற்றியினை எதிர்பார்க்கின்றனர்.

இதே நேரம் மூன்றாம் கட்டத் தேர்தல் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதனால் அதற்கான பிரசார வேலைகள் அனைத்தும் இன்று மாலை 5-00 மணிக்குள் முடிவடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அநாதரவான நிலையில் 6 கோடி ரூபா பொருள்கள்

இராமநாதபுரம் கடற்கரை ஓரமாக சுமார் ரூபா 6 கோடி பெறுமதியான வெள்ளிச் சாமான்களை தமிழகக் காவல் பகுதியினர் கடந்த திங்களன்று கைப்பற்றியிருக்கிறார்கள்.

சுமார் எண்பதாயிரம் கிலோகிறாம் எடையுள்ள இந்த வெள்ளிச் சாமான்கள் கடற்கரையில் ஓர் இடத்தில் தேடுவாரற்றுக் கிடந்தன. வெளிநாட்டு முத்திரையுடன் காணப்பட்ட இந்த வெள்ளிச்சாமான்கள் டுபாயிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படுகிறது.

# புகைப்படக்காரர் மீது பலமான சந்தேகம்

(சென்னை)

தமிழ்நாட்டில் ராஜீவ்காந்தி கொலைசெய்யப்பட்டமை தொடர்பாக புகைப்படக்காரர் ஒருவர் பலமான சந்தேகத்திற்குள்ளாகியுள்ளார். இதனால் பல புகைப்படக்காரர்களை பொலிசார் விசாரித்து வருகிறார்கள்.

ராஜீவ் கொலையையடுத்து மேலும் இரு இலங்கைத்தமிழர்கள் இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் சேலத்திலும், மற்றொருவர் சென்னை மீனம்பாக்கத்திலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தமிழ் நாட்டிற்கு ஐம்பது படை அணிகள்

(சென்னை)

தமிழக நாடாளுமன்ற, சட்ட மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய பாதுகாப்புப் படையின் 50 அணிகள் தமிழ்நாட்டுக்கு வருகின்றன இதில் ரயில்வே பாதுகாப்புப்படை அணிகள் பதினைந்தில், ஐந்து அணிகள் சென்னை வந்து சேர்ந்துவிட்டன. மேலும் ஊர்காவல் படையினர், முன்னாள் இராணுவத்தினர், மாநிலக் காவல்படையினர் ஆகியோரும் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவர்.

தமிழகத்தில் மூன்றாவது கட்டத் தேர்தல் எதிர்வரும் சனிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெறும்.

# ராஜீவ்மரணம் தொடர்பாக இரு பெண்கள் புகைப்படம்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணத்தோடு தொடர்புபடுத்தி நளினி, சுபா என்ற இரண்டு இலங்கைத் தமிழ்ப் பெண்களின் புகைப்படங்களை இந்திய மத்திய புலனாய்வுப்பிரிவு வெளியிட்டுள்ளது.

தாஸ் என்று அழைக்கப்படும் மோகன் என்ற 18 வயது இலங்கைத் தமிழ் இளைஞனும் மத்திய புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை அடையாளம் கண்டு கொள்ளவும் கைது செய்யவும் வழிகோலக் கூடிய எந்த ஒரு தகவலுக்கும் சன்மானம் தரப்படும் என்றும் மத்திய புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

# ஞாபகார்த்தப் போட்டி

(குருநகர்)

மண்டைதீவில் சிறிலங்கா படையினரால் படுகொலையுண்ட 31 குருநகர் மீனவர்களது ஞாபகார்த்த தாயஜோதி' சுற்றுக் கிண்ணத்துக்கான 7 பேர்கள் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவானது.

கடந்த 10 ஆம் திகதி குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ் பல்கலைக் கழகத்தை எதிர்த்து ஆடிய சென் அன்ரனிஸ் விகழகம் 'பினால்டி' முறையில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

குருநகர் பாடும் மீன் விகழக அனுசரணையுடன் ஆசையப்பர் விகழகம் கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்படி போட்டிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (21)

# வித்தியாலய பவளவிழா

(பருத்தித்துறை)

புற்றளை மகா வித்தியாலயம் பவள விழாவை (75 ஆம் ஆண்டு நிறைவு விழா) இவ்வருடம் கொண்டாடுகின்றது இவ்வருட இறுதியில் நடைபெறவுள்ள இப்பவள விழாவின்போது வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது

இவ்விழாக்களுக்கான சகல ஒழுங்குகளையும் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது. பவள விழாவையொட்டி வித்தியாலய மாணவர்களின் நூல் நிலையமும் நவீனமயப்படுத்தப்படவுள்ளது இந்நூல் நிலையத்திற்கு இப்பகுதிகளைச் சேர்ந்த பல நலன் விரும்பிகள் பல்வேறு வகையான நூல்களை அன்பளிப்பு செய்வதற்கும் முன்வந்துள்ளனரென தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# ஊழியருக்கான சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்துத் தொழிற் சாலை ஊழியருக்கான பங்குனி, சித்திரை மாதங்களுக்கான சம்பளக்காசோலை 12-06-91 இலிருந்து நாவலர் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுகிறது.

வழமையான காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை நிர்வாகம் அறியத்தருகின்றது.

பொன்னாலை

# மூளாய்ப் பகுதிகளில் துப்பாக்கிச்சூடு, ஷெல் தாக்கு

(பொன்னாலை)

காரைநகரில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொன்னாலை, மூளாய் ஆகிய பகுதிகளை நோக்கிகடந்த இரு நாட்களாக ஷெல் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் இடையிடையே ஷெல் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. நேற்று முன் தினம் காலையும், இரவும் பத்து மணியளவில் மேற்படி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன இத்தாக்குதலில் மூன்று பேர் காயமடைந்துள்ளதுடன் வாசிகசாலை நிலையம் ஒன்றும் சேதமடைந்தது

இத்தாக்குதல்கள் நடைபெற்ற அதே நேரத்தில் கடலில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. இத் தாக்குதல்களினால் இப்பகுதிகளில் இருந்து பலபொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (ஈ)

# இந்தியாவிற்கு 15 கோடி மில்லியன்

(டோக்கியோ)

இந்தியாவில், வெளிநாட்டு நாணயமாற்று பற்றாக்குறையை நீக்குவதற்காக பதினைந்து மில்லியன் கோடி ரூபா கடனை இந்தியாவிற்கு வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் டோக்கியோவில் ஜப்பானிய வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியத் தூதுவரிடம் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும்

# முத்தமிழ் விழா

எட்டாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள 'மாவீரர் கலை அரங்கம்'
நாள் : 13 – 06 – 1991 வியாழக்கிழமை
நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை :
நாதஸ்வரம்: திரு. வி. கே. கானமூர்த்தி
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி
தவில்: திரு. பி. கணேசன்
திரு. ஆர். பாஸ்கரன்

★ விடுதலைப் புலிகளின் திறப்புரை.

★ சிறப்புரை: புலவர் ஈழத்துச் சிவானந்தன்

★ முத்தமிழ் விழா மலர் வெளியிடுதல்.

★ கவியரங்கு:
பொருள்: ''நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்''
தலைமை: கவிஞர் இ. முருகையன்
பங்கேற்போர்
கவிஞர்கள்: திரு சோ. வே. பஞ்சாட்சரம்
திரு. நாவண்ணன்,
திரு. மு. பொன்னம்பலம்
திரு. சில்லையூர் வே. குமாரசாமி
திரு. ஜெயசீலன்
பண்டிதர் வீ. பரந்தாமன்
திரு. சு. வில்வரத்தினம்
திரு. காரை. சுந்தரம்பிள்ளை
திரு. பொ. கணேசமூர்த்தி
திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன்
கவிஞர் ரூபப்

★ மூளாய் கலாலயம் வழங்கும்
"புலிகளுக்கு மட்டுமா போராட்டம்....?"
நாட்டிய நாடகம்

★ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தயாரித்து அளிக்கும்
" தீக்குளிக்கோம் தீயிட்டெரிப்போம்"
நாடகம்

★ கலைஞர் வேல் ஆனந்தன் ஆடற்கலை நிறுவகம் வழங்கும்
"இனியொரு விதி செய்வோம்"
நாட்டிய நாடகம்

# போக்குவரத்து இன்மையால் பொருள்கள் எடுக்க சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான கப்பல் போக்குவரத்து தொடர்ந்தும் சீரற்ற நிலைமையில் இருப்பதால் இம்மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவருவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளும், பருவநிலை சீரற்றதாக இருப்பதாலும் கப்பல் மூலம் பொருட்களை தருவிப்பது சிரமமாக உள்ளதால் உளர் உணவு விநியோகம் தாமதமடைந்துள்ளது.

மேலும் இம்மாவட்டத்தின் விவசாய முயற்சிகளுக்குத் தேவையான உரவகைகளையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை இதனால் செயலக அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து சுமார் 80 மெற்றிக் தொன் உரவகைகளைக் கடனாகப் பெற்றுள்ளனர் இம்மாவட்டத்தின் உரத் தேவை 300 மெற்றிக்தொன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

# பாகிஸ்தானுக்கு சீனஏவுகணைகள்

(நியூயோர்க்)

பாகிஸ்தான் மிக விரைவில் சீனாவிலிருந்து எம்- 1 ரக ஏவுகணைகளைப் பெறவுள்ளது என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது இது 300 கி மீ தூரம் தாக்கக்கூடியது.

இந்த ஏவுகணைகள் இதுவரை பாகிஸ்தானுக்கு வந்து சேரவில்லை என்றாலும் ஏவுகணைகளை ஏவும் உந்து பொறிகள் பாகிஸ்தானில் இரு கொண்டும் அதிவொன்றுமாகப் பொருத்தப் பட்டுள்ளன என்று நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது

எம்-11ரக ஏவுகணைகள் மிக விரைவில் பாகிஸ்தான் வந்தடையும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# சோவியத்திற்கு 150 கோடி டொலர்உதவி

(வாஷிங்டன்)

அமெரிக்க விவசாயிகளிடம் இருந்து உணவு தானியங்களை வாங்கிக் கொள்வதற்காக சோவியத் யூனியனுக்கு 150 கோடி டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

பால்டிக் குடியரசுகள் உட்பட எல்லாக் குடியரசுகளுக்கும் நியாயமான ஒரு விதத்தில் இந்த உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்படுமென மொஸ்கோ உறுதியளித்த பின்னரே இந்த உணவு உதவியினை அளிப்பது என முடிவு செய்ததாக புஷ் தெரிவித்தார்.

இந்த தானியங்களுக்கான உதவி மூன்று கட்டமாக வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## வரி விளம்பரம்

**தேவை**

உரும்பராயில் உள்ள பாலர் பாடசாலைக்கு பயிற்சி பெற்ற ஆசிரியை தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 'அந்தன் அருணை' உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

(R-1458)

**பயிற்சி வகுப்பு**

விஞ்ஞான முறைப்படி உடை தயாரித்தல், சிகையலங்காரம் Hair Style, Cake Icing, General Cookery, Bridal Make-up, Flower Making Interior Decoration. அனித்தா பயிற்சி நிலையம், பூநாறி மரத்தடி, உரும்பராய்.

(B-2650)

**பெற்றுக் கொள்ளவும்**

(யாழ்ப்பாணம்)

ஆண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று மாசவன் சந்திக்கும் நீர்வேலிக்குமிடையில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


## இந்திரா காங்கிரஸிற்கு

# அனுதாப அலையே தேவை ராஜீவ் காந்தியல்ல!

### கருணாநிதி

(சென்னை)

ராஜீவ்காந்தியின் மரணத்தோடு சம்பந்தப்பட்ட உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்தாக வேண்டும் என தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் தேர்தலில் சுய ஆதாயம் தேடிக்கொள்ளுவதான நோக்கத்துடன் பொதுமக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகச் செய்யப்படும் முயற்சிகள் இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தப்பி ஓடுவதற்குத்தான் துணைபுரியும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு நிலைமை சரியானதாக இல்லை என்ற காரணத்தை வைத்துத்தான் தி.மு.க அரசாங்கத்தை பதவியில் இருந்து நீக்கியது மத்திய அரசாங்கம். ஆனால் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமுலில் உள்ள காலத்தில் தான் ராஜீவ்காந்தி மரணமுற்றார். மாநில அரசாங்கத்தால் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் கருணாநிதி குறிப்பிட்டார்.

மேலும் குறைந்த பட்சம் தமிழக மாநில ஆளுநர் அவரது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூட இந்திரா காங்கிரஸ் கேட்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். ராஜீவ் காந்தியின் அனுதாப அலைதான் இந்திரா காங்கிரஸிற்கு தேவையே தவிர ராஜீவ் காந்தி அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

### பாம்பு தீண்டி குடும்பஸ்தர் மரணம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு பகுதியில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

கடந்த 9 ஆம் திகதி இரவு வீட்டில் நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் பாம்பு தீண்டியதில் கந்தசாமி பிள்ளை கதிரவேல் (40) என்பவர் மரணமானார்.

வவுனியா பகுதியில் பாம்பு தீண்டியினால் இறப்பவர் தொகை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைத்திய வசதி அற்ற காரணத்தினால் இம்மரணம் நிகழ்ந்ததாகவும் கூறப்பட்டது. (நி)

## இயற்கையின் கோரம்

# கடும் மழை; அனல் காற்று இந்தியாவில் 304 பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் பல பாகங்களிலும் இடம் பெற்ற கடும்மழை மற்றும் கடும் வெப்பத்தினால் கடந்த இரு நாட்களில் 304 பேர் உயிர் இழந்ததாகக் கூறப்படுகிறது.

மகாராஷ்டிரத்தில் பெய்த கடும்மழையினால் 60 பேரும் குஜராத், கேரளம் மற்றும் கர்நாடகத்தில் பெய்த கடும் மழையினால் 72 பேரும் உயிர் இழந்துள்ளனர். பம்பாயில் நேற்றுக்காலை 733.8 மில்லி மீற்றர் மழை பதிவாகியதாக தெரிவிக்கப்படுகிறது. பம்பாயில் கடந்த நூற்றாண்டு காலத்தில் கண்டிராத அளவுக்கு கடும் மழை பெய்கிறது.

இதே நேரம் ராஜஸ்தானில் பரவலாக வீசிய அனல் காற்றினால் உத்தியோகபூர்வ தகவல்களின்படி 94 பேர் உயிர் இழந்துள்ளனர். வரலாற்றிலேயே இம்முறைதான் மிகப்பெரிய அனல் காற்று வீசியதாக வானிலை அறிவிப்பு நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதே வேளை பத்திரிகைகள் 192 பேர் உயிர் இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றன.


**UNIVERSITY OF JAFFNA**

**M.Sc Biotechnology**

Applications are invited from graduates in Chemical, Biological, Medical, Dental, Veterinary, Agriculture and Engineering Sciences for admission to the above course. Forward application with Bio data. All applicants will be required to sit for a qualifying examination and a viva. Address correspondence to Registrar, University of Jaffna, Jaffna.

**Closing date 31st of July, 1991.**

Registrar.

(B/2665)

## நிருபர்கள் தேவை

### செய்தித்தகவல் மையம்

செய்தித்தகவல் மையம், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவுகள் தோறும் நிருபர்களை நியமனம் செய்து வருகிறது.

க.பொ.த. சா/த அல்லது உ/த சித்தியடைந்த அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்தகைமையுடைய செய்தி சேகரிக்கும் ஆற்றலும், எழுத்தாற்றலும் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. நிருபர்களுக்கு போக்குவரத்துச் செலவுட்பட செய்தித் தகவல்களுக்கான பணம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தத்தமது பகுதிக் கிராமசேவை அலுவலரிடம் இருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:

பொதுமக்கள் தமது பிரச்சினைகள், பாதிப்புக்கள் குறித்து எழுத்துமூலம் நேரில் சமர்ப்பிக்கலாம்.

நிர்வாகி,
செய்தித்தகவல் மையம்,
கோப்பாய்.

(B-2654)

### நேர்முகப் பரீட்சை

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா பகுதிநேரம் / முழுநேரம் 1990/91

மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு எழுத்துத் தேர்விலே தகுதி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் 30-06-91 முற்பகல் 8.30 தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை பல்கலைக்கழகச் சபை அறையில் நேர்முகப்பரீட்சை நடைபெறும். இவர்களின் பெயர் விபரங்கள் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளன.

அத்துடன் தகுதி பெற்ற மாணவர்களுக்குக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

பதிவாளர்.

(B/2664)

முத்தமிழ் விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்!

தமிழின் பெருமைகளைப் பேசுவோம் - பழந்
தமிழிற் புதிய ஒளி வீசுவோம்
தமிழர் ஒரு குலமாய் வாழுவோம் - இதைத்
தமிழர் தமிழ் விரதம் பூணுவோம்.

- கவியோகி சுத்தானந்தபாரதியார்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

(B/2667)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீர ஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 03 - 09 - 1969 | 05 - 06 - 1989 |

திதி: 13.6.1991

**லெப்டினன் குட்டி**

**(துரைரெத்தினம் சிவநேசன்)**

களம் பல கண்டான் குட்டி
களப்பலியானான் குட்டி
மடிந்தான் மாவீரனாக
மக்களின் மைந்தனாக

★ "குட்டி, புலிகளின் தங்கக்கட்டி" ★

5.6.1989 இல் புத்தூர், வாதரவத்தை கண்டிக்காடு என்னும் இடத்தில் இந்திய இராணுவத்தின் சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட நேரடி மோதலில் தமிழ் ஈழ மண்மீட்புக்காக தன்னுயிர் தந்த லெப்டினன் குட்டி அவர்களை நினைவு கூரும்.

நவக்கிரி,
புத்தூர்.
(R/1454)

பெற்றோர்,
சகோதரர் உறவினர்
நண்பர்கள்

வாழ்க தமிழ்!
வளர்க நம கலைகள்!!

**சிறப்பெய்தட்டும் முத்தமிழ்விழா!!!**

யாழ்நகரில்,
சங்கீதம், பரதநாட்டியம், வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல் வகுப்புகளுக்கும்
டிப்ளோமா மனைப்பொருளியல் பயிற்சிகளுக்கும்
தன்னிகரில்லாத ஒரேயொரு கலைக்கல்லூரி

# கலாலயா

16-06-91 முதல் மேற்படி வகுப்புக்களில் புதிய மாணவ மாணவியர் அனுமதிக்கப்படுவர்.

விபரங்களுக்கு:

**கலாலயா**

விக்டோரியா வீதி (ஆஸ்பத்திரியின் பின்புறம்) யாழ்நகர்.

(B-2662)

■ சிந்தனைக்கு ■

அறிவிலி, அதிகாரத்தில் இருந்துவிட்டால், அதிக ஆபத்தானவன்

— டெனிஸ்ஃபோன்விஸின்


ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13 06 1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 625-2839 நிர்வாகபீடம்: 9299
த.பெ எண் 65


# அரச இயந்திரமாகிவிட்ட அரச அதிகாரிகள்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் தொடங்கி ஒரு வருடம் முடிவடைந்த காலத்தில் மூன்றிலொரு பகுதி உணவே யாழ் மாவட்டத்திற்குக் கிடைத்துள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் சிறிலங்கா அரசாங்கம் ''யுத்தம் நடைபெறுகின்ற போதிலும், மக்களுக்கு இடைவிடாது உணவு வகைகளைக் கப்பல் மூலம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம் என்று சர்வதேச ரீதியாக பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது.

இதற்குத் துணை புரிவதைப்போல் செயலக அதிகாரிகளும் தமது அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர். யாழ் மாவட்டத்தில் இதுவரை அதாவது போர் தொடங்கி ஒரு வருட காலத்தில் மூன்றிலொரு பங்கு உணவு வகைகள்தான் வந்தன என்ற புள்ளி விபரமானது பத்திரிகைகளில் சென்ற மாதங்களில் வந்த செய்திகளுக்கு ஆதாரம் ஊட்டுவதாக அமைகிறது.

அதிகாரிகள் தமது முழு அதிகாரங்களையும் பயன்படுத்தி கடமையைச் செய்ய வேண்டும் என்பதே நியதியாக இருக்க, தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி தமது பதவியை மட்டும் பாதுகாத்து வருகின்றனர்.

நாள் ஒன்றுக்கு மக்களுக்குத் தேவைப்படும் உணவினைக் கணக்கிட்டு கொழும்பு சென்று, சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து அதனைப்பெற வழிவகைகளைச் செய்ய வேண்டுமே தவிர இருக்கும் உணவினை எவ்வாறு பங்கிடு செய்ய வேண்டும் எனக் கணக்கிடத் தேவையில்லை. போராட்டம் எமது மண்ணில் உச்சநிலையை எய்திக்கொண்டிருக்கும் நிலையில் எமது நிலைமைகள் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அம்பாறையில் 32ஆவது கட்ட நிவாரணம் வழங்கும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் 12ஆவது கட்டமே வழங்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் உணவுப் பற்றாக்குறை பற்றியோ அல்லது மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு குறித்தோ செய்தி வந்தால் அதனை மறுத்து அறிக்கை வெளியிடும் அதிகாரிகளே அதிகம்பேர் உள்ளனர்

இவ்வாறு இந்த அதிகாரிகளின் அறிக்கைகளானது சிறிலங்கா அரசாங்கத்திற்கு துணைபோவதற்கும் சர்வதேச உலகத்திடம் இருந்து அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கும் வழி வகுக்கிறது.

இதேவேளை, கொழும்பில் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும்போதே இங்கு அதிகாரிகளினால் உணவுப் பொருள்களுடன் கப்பல் யாழ் நோக்கி வருகிறது என அறிவிக்கப்படுகிறது.

ஆனால் அக்கப்பல்களின் கொள்ளளவிற்கு ஏற்ப பொருள்கள் ஏற்றப்படுவதில்லை.

இங்கு சிறிலங்காவின் பிரசாரத் தேவை கருதியே கப்பல்கள் வருகின்றன என்பதே உண்மை.

இங்குள்ள அதிகாரிகளும் அரச இயந்திரமாக செயல்படவே பழக்கப்பட்டவர்களாக இருக்கிறார்களே தவிர, மக்களின் தேவையை உணர்ந்தவர்களாக இல்லை.

அதிகாரிகள் சிலருக்கு எமது பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களோ அல்லது மருந்துப் பொருள்களின் அளவுகளோ குறித்த விபரங்கள் தெரியாமலும் இருக்கின்றன. இதனை அவர்களே ஏற்றுக்கொள்ளும் வகையில் பத்திரிகைகளில் செய்திக் குறிப்பு வெளியிடுள்ளார்கள்.

சர்வதேச உலகில் ஒரு குழந்தை அல்லது சராசரி நபர் ஒருவர் பெறும் கலோரி உணவினைவிட எமது மக்கள் குறைந்தளவு கலோரிப் பெறுமானமுடைய உணவினையே பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த நிலை காலப்போக்கில் நோயையும் பட்டினிச்சாவையும் எமக்கு கொண்டு வந்துவிடும். அந்தவகையிலேயே ஒரு வருட கால சிறிலங்கா அரசாங்கத்தின் உணவு விநியோகம் நடைபெற்றதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதுதான் வடபகுதியின் உணவு குறித்த யதார்த்த நிலையும் ஆகும்.

# காங்கிரஸாருடன் கூட்டுச் சேர வி. பி. சிங் தயாராவது ஏன்?

ஒன்பதாவது பொதுத் தேர்தலின்மூலம் நிலையான அரசமைக்க முடியாது அது இடையிற் தோல்வியில் முடிந்தது பத்தாவது பொதுத் தேர்தல் அரசமைக்க உதவுமா? அல்லது அவ்வாறு அரசமைத்தாலும் அந்த அரசாங்கம் நிலைக்குமா? என்ற இரு கேள்விகளும் அரசியல் வானில் பெரிதும் எதிரொலிக்கின்றன.

பத்தாவது தேர்தலின் முடிவில் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஓர் அரசமைக்கப்படும் என்பது நிச்சயம்; ஆனால் அவ்வாறு அமைக்கப்படும் அரசு நிலைக்குமா? இல்லையா? என்பதே கேள்விக்குறி.

காங்கிரஸும், வி. பி சிங் தலைமையிலான தேசிய முன்னணியும் கூட்டுச் சேர்வதற்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன; காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெற முடியாது போனால் தேசிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைப்பது சாத்தியம் போலத் தோன்றுகின்றது. வி. பி. சிங் இதற்கு வெளிப்படையாகவே பச்சை விளக்குக் காட்டியுள்ளார்.

வி. பி. சிங்கின் இப்பச்சை விளக்கை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?

வி. பி. சிங் அடிப்படையில் காங்கிரஸின் கொள்கைக்கு முரணானவரல்ல; காங்கிரஸினுள் நேரு பரம்பரையின் ஆதிக்கத்திற்கும், அதன் விளைவாக காங்கிரஸின் சில பிழையான நடைமுறைக்குமே எதிரானவர். ராஜீவ் காந்தியின் மரணத்துடன் நேரு பரம்பரையின் ஆதிக்கத்திற்கு ஓர் இடைக்காலத்தடை ஒன்று இப்போது ஏற்பட்டுள்ளது இந்நிலையில் காங்கிரஸுடன்கூட்டுச்சேர வி.பி. சிங்கிற்கு ஒரு மனத்தடையும் இல்லை. ரஜீவ் இல்லாத காங்கிரஸை உட்கட்சி ஜனநாயகம் உள்ள கட்சியாக ஆக்குவது இலகுவானதாக இருக்கும் என்ற மதிப்பீடு அக்கட்சிக்குள் நெடுங்காலம் இருந்த வி. பி சிங்கிற்குத் தெரியும்; ஆதலினால் காங்கிரஸுடன் கூட்டுச்

## சாரணன்

சேர்வது நல்லது என்ற முடிவிற்கு வி. பி. சிங் வந்திருக்கலாம். பாரதீய ஜனதாக் கட்சி கணிசமான அளவு வளர்ச்சியை எட்டியுள்ள சூழலில் முக்கட்சி வளர்ச்சி சாத்தியமற்றது என்ற முடிவுக்கு காங்கிரஸும், தேசிய முன்னணியும் வந்திருக்கலாம். எனவே பாரதிய ஜனதாவின் வளர்ச்சியை எதிர்கொள்ள இவ்விரு அமைப்பும் இன்றைய சூழலில் கூட்டுச்சேர்வது சாத்தியம்.

இவற்றிற்கு அப்பால் வி. பி சிங்கிடம் ஓர் அரசியல் உள்நோக்கமும் இருக்கலாம். அதாவது காங்கிரஸுக்குள் தலைமைப் பதவிக்கு மும்முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. பி. வி. நரசிம்மராவ், எம். கே. திவாரி, பிரணாப் முகர்ஜி ஆகிய மூவரும் போட்டியில் மேல் நிலையில் உள்ளனர். இவர்களைவிட வேறுசிலரும் முயல்கின்றனர். ராஜீவ் காலத்திலிருந்த ஒரே தலைவருக்குப் பதிலாக கூட்டுத் தலைமையை உருவாக்க வேண்டும் என்ற ஒரு கருத்து வலுத்துள்ளது தற்போது தெரிவு செய்யப்பட்டபடி கட்சித் தலைவராக நரசிம்மராவ் இருக்க இன்னொருவர் பாராளுமன்ற குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகின்றது; பாராளுமன்ற குழுத்தலைவரே பிரதமராக வருவார்; இதில் ஓர் இழுபறி நிலை ஏற்பட்டு மூவரில் யாராவது ஒருவர் பிரதமராக வந்தாலும் அது ஏதோ ஒரு கட்டத்தில் சரிந்து வீழ்ந்தால் அச்சூழலில் மூவருக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியின் விளைவாக இறுதியில் வி. பி. சிங் பிரதமராக வருவதற்கான வாய்ப்பு ஏற்படலாம்.

பலம்பொருந்திய ஒரு மத்திய அரசை அமைக்க ஆதரவளித்தல் என்ற கொள்கை பேரால் காங்கிரஸுடன் வி. பி சிங் தலைமையிலான தேசிய முன்னணி கூட்டுச் சேர்ந்து பொறுமையுடன் இருந்தால் இறுதியில் வி. பி. சிங்கைத்தேடி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆதரவை காங்கிரஸார் வழங்கக்கூடும்.

## சனசமூக நிலையங்களில் விளையாட்டுப் போட்டி

(குருநகர்)

சனசமூக நிலையங்களின் சமாசம் வழமைபோல் இவ்வருடமும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்கள் சமாசத்தில்பதிவு பெற்றிருந்தால் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

உதைபந்தாட்டம் 7 பேர் கொண்டது 19-வயதுக்கு உட்பட்டவர்கள் வலைப் பந்தாட்டம் 7பேர் கொண்டது பெண்கள். தாச்சி-6பேர் கொண்டது. எல்லை 16 பேர்கள்.

ஒரு சனசமூக நிலையத்திலிருந்து மேற்படி போட்டிகளில் ஒன்றுக்கு ஒரு குழு என்ற முறையில் விண்ணப்பிக்கலாம். (21)

## திருத்த வேலைக்கு இரண்டரை லட்சரூபா தேவை

யாழ்ப்பாணம் செயலகம் கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் கட்டட மதிப்பீடு செய்ததில் இரண்டரை லட்ச ரூபாவிற்கு திருத்த வேலைகள் செய்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது என செயலக பொறியியலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.

யாழ். செயலகத்தில் மிக அண்மைக் காலமாக சுகாதார சீர்கேடடைந்த நிலையும் நீர் வசதியின்மையும், மின்கம்பிகள் அறுந்து தொங்கிக் கொண்டிருக்கும் நிலையும் இருந்து வருகிறது.

ஆக ஒட்டுமொத்தமாக கச்சேரி சுற்றாடலுக்கான திருத்தப் பெறுமதி இரண்டரை லட்சரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (லோ)

## வீடுகளுக்கு கிடுகு வழங்க 'போறாட்'நிறுவனம்

புளியங்குளம் பகுதியில் சேதமடைந்துள்ள வீடுகளுக்கு கிடுகு வழங்க போறாட் நிறுவனம் முன் வந்துள்ளது.

சமீபகாலமாக புளியங்குளம் பகுதியில் இடம் பெற்று வரும் விமானத் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்திருக்கின்றமை தெரிந்ததே. (இ)

## முத்தமிழ் விழாவில்

## பன்னிரு கவிஞர்களின் கவியரங்கு இன்று

தமிழீழத்தின் பெருங்கவிஞர்களான பன்னிரு கவிஞர்கள் பங்கேற்கும் கவியரங்கு இன்றைய முத்தமிழ் விழாவில் இடம் பெறுகின்றது யாழ் முற்றவெளியில் அமைந்திருக்கும் மாவீரர் கலை அரங்கத்தில் இன்று இடம்பெறப்போகும் இந்தக் கவியரங்கினை கவிஞர் இ. முருகையன் தலைமையேற்று நடாத்துகின்றார். ''நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்'' என்ற தலைப்பில் இடம்பெறும் இக்கவியரங்கில் கவிஞர்கள் திரு. சு. வே. பஞ்சாட்சரம், திரு நாவண்ணன், திரு மு. பொன்னம்பலம், திரு. கல்வயல் வே. குமாரசாமி, திரு. ஜெயசீலன், பண்டிதர் வீ. பரந்தாமன், திரு. சு. வில்வரத்தினம், திரு. காரை. சுந்தரம்பிள்ளை, திரு. பொன். கணேசமூர்த்தி, திரு. மு.வே. யோ. வாஞ்சிநாதன், கவிஞர் ... ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## சனசமூகநிலைய கலை கலாசாரப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின்சமாசத்தினால் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையில் கலைகலாசாரப் போட்டிகள் நடாத்தப்பட உள்ளன.

இப்போட்டியில் கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், பொது அறிவு ஆகியன நடைபெறவுள்ளன. கலை, கலாசாரப் போட்டிகள் சம்பந்தமான முழுவிபரங்களும், சகல சனசமூக நிலையங்களுக்கும், அறிவிக்கப்படும் எனச் சமாசத்தின் கலை கலாசாரக்குழுத் தலைவர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார். (24)

## நாடகம், நாட்டிய நாடகம்

(நமது நிருபர்)

பெண் போராளிகள் முற்று முழுதாக பங்கேற்கும் ''தீக்குளிக்கோம் தீயிட்டெரிப்போம்'' என்ற நவீன நாடகம் இன்று நடைபெறும் முத்தமிழ் விழாவில் இடம்பெறுகிறது இந்த நாடகத்தினை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் தயாரித்து வழங்குகின்றனர்.

அத்துடன் கலைஞர் வேல் ஆனந்தன் ஆடற்கலை நிறுவகம் வழங்கும் ''இனி ஒரு விதி செய்வோம்'' நாட்டிய நாடகம் இடம் பெறவிருக்கின்றது. நீண்ட காலத்தின் பின் கலைஞர் வேல்ஆனந்தன் தயாரித்து வழங்கும் நாட்டிய நாடகம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்த்திருவிழா

(கொழும்புத்துறை)

புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா இன்று13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

ஆலய அன்னதான சபையினரால் வழமை போல் இவ்வருடமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட உள்ளதாக அன்னதான சபையின் உப தலைவர் திரு. ஆ. சாந்தலிங்கம் தெரிவித்துள்ளார். (24)

## வங்க தேச முன்னாள் அதிபர்

# ஜெனரல் எர்ஷாத்துக்கு பத்து வருடச் சிறை

(டில்லி)

பங்களாதேஸ் முன்னைநாள் அதிபர் ஜெனரல் எர்ஷாத் தன்வசம் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்ததற்காக அவருக்குப் பத்து ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இருபத்தைந்து நாட்கள் விசாரணைக்குப் பிறகு ஒரு விசேஷ நீதிமன்றம் நேற்று டாக்காவில் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

சென்ற ஆண்டு டிசம்பரில் ஜெனரல் எர்ஷாத் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

## நெருக்குதல்களின்

வடிவங்களின் வளர்ச்சிக்காகவும் மட்டும், இன்று, நாம் இந்த விழாவை நடாத்தவில்லை.

இந்த விழாவின் மூலம், இந்த மண்ணின் பெருமைகளை சொல்ல நாம் விளைகின்றோம். அதே நேரம், இந்த மண்ணின் போராட்ட வாழ்வை, இங்கு வாழும் மக்களின் துன்ப - துயரங்களை, அவர்களின் வெற்றிகளை, தமிழ்மை ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடத் துடிக்கும், அவர்களின் இதயவுணர்வுகளை, இங்கு நாங்கள் வெளிப்படுத்த முனைந்து நிற்கிறோம்.

இந்த மண்ணில் ஒடும் இரத்தத்திற்கும் - கண்ணீருக்கும், நடுவே தான், முத்தமிழ் விழா இன்று நடைபெறுகிறது. இந்த வேளையில், இந்த மண்ணை மீட்பதற்காக, ஒவ்வொரு நாளும், எங்கோ ஒரு மூலையில் ஒரு போராளி மரணிக்கின்றான்,

அவனின் இரத்தம் தோய்ந்த உடலைச் சுமந்தபடியே, இந்த விழாவை நாம் நடாத்துகின்றோம்; இதுவும் ஓர் புரட்சி - இதுவும் ஓர் போராட்டம் இந்த விழாவை கொண்டாடுவதால் நாம் பெருமை கொள்கிறோம்.

ஏனெனில், நெருக்குதல்களின் மூலம், எங்களை அடக்கி விடலாம் என்று நினைக்கும் - ஆக்கிரமிப்பாளனுக்கு, அந்த நெருக்குதல்களின் நடுவேயும். எங்களால் பாடமுடியும், எங்கள் தனித்துவங்களை பாதுகாக்க முடியும், என்பதை இந்த விழா தெளிவுபடுத்தும்

இங்கு நடக்கும் இந்த முத்தமிழ்விழா இதுவரையும் நிகழாதது; தமிழர்களின் வரலாற்றில் புதுமையானது. வீரம் நிறைந்ததொரு களத்தில் விடுதலையை - சுதந்திரத்தின் பெருமதியை இந்த விழா வெளிப்படுத்திச் செல்லும்.

இதுவரைநாளும், நாங்கள் பழங்கால இலக்கியங்களிலேயே தங்கி நின்றோம் வீரத்தையும் - தியாகத்தையும், இராமாயணத்திலும் - மகாபாரதத்திலுமே தேடிவந்தோம். தமிழர்களின் வீரத்தைப்பாடியகலிங்கத்துப்பரணியையே திரும்பத் திரும்பப் பாடினோம். ஆராய்ச்சி செய்தோம் அதற்கு வேறு வேறு வடிவம் கொடுத்தோம். ஆனால், இன்று இந்த அடித்தளம் மாற்றங்கண்டுள்ளது.

இந்த மண்ணின் - இங்கு வாழும் மக்களின் வீரம் நிறைந்த போராட்டத்தையும், தியாகங்களையும், வேதனைகளையும் பாடுவதற்கு - இலக்கியமாக்குவதற்கு இன்று நாம் தொடங்கியுள்ளோம்;

புதிய பரணிகளும் - பாடல்களும் எங்கள் தெருக்களில் எங்கும் கேட்கத் தொடங்கி உள்ளன எமது கலைவடிவங்கள் போராட்டத்திற்கு புதிய பரிமாணங்களைச் சேர்க்கத் தொடங்கியுள்ளன.

அழிவுப்பாதையில் திசை தெரியாமல் சென்று கொண்டிருந்த தமிழ் இலக்கியங்களையும், தமிழ் கலை வடிவங்களையும் ஒரு புரட்சிகரமான பாதையில் செல்வதற்கு இந்த மண்ணில் நிலவிய போராட்ட சூழல் உதவியது. அந்த வகையில்; எங்கள் விடுதலைப் போராட்டம் நிகழ்த்திய சாதனைகளில் கலைகளுக்கு புதிய வடிவங்களைக் கொடுத்ததும் ஒன்றாகிறது.

எங்கள் விடுதலைப்போராட்டம் பல சாதனைகளை சந்தித்துள்ளது. பல மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது; போராட்டம் இலகுவானதல்ல, துன்பமும் துயரமும் நிறைந்தது என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். கல்லிலும், முள்ளிலும், அழிவுக்கும் துயருக்கும் நடுவே எங்கள் உடல்களின் மேலாகத்தான், விடுதலைப் பாதையில் நாம் மக்களை அணிதிரட்டிச் சென்றோம்.

எமது மக்களின் தியாகங்களும் - பங்களிப்புகளும், எமது போராளிகளின் வீரமும் - அர்ப்பணிப்புகளும் எங்கள் விடுதலைப் போராட்டத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றது இங்கு நாம், இன்று அச்சமின்றி நிமிர்ந்து நிற்கிறோம் என்றால், அதற்குக் காரணம் தம் வாழ்வை இந்த மண்ணின் வாழ்விற்காக அர்ப்பணிப்புச் செய்த போராளிகளே ஆகும். இந்த மண்ணை நேசித்த போராளிகளால் - அவர்களின் தியாகங்களால்தான் இன்று இந்த மண் உயர்ந்து நிற்கிறது உலகம் வியக்கத் தக்க வாழ்வு கண்டுள்ளது, தங்கள்வாழ்வை மறந்து - இந்த மண்ணுக்கு வாழ்வு தேடித் தந்த அந்த மாவீரர்களின் நிழலிலே தான் நாம் இன்று ஆடுகின்றோம், பள்ளும் - பரணியும் பாடுகின்றோம். இந்த மண்ணுக்காக மரணித்த மாவீரர்கள் - ஒவ்வொருவரும் போற்றப்பட வேண்டியவர்களே. இந்த மாவீரர்கள் அனைவரது நினைவாகத் தான் நாம் மாவீரர் நாளைக் கொண்டாடுகின்றோம். இந் நாளை எமது தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

நடந்து முடிந்த மாவீரர் நாளில் நாம் ஓர் இலக்கியப் போட்டியினை நடாத்தினோம் இந்த இலக்கியப் போட்டி எங்களுக்கு பல விசயங்களை தெளிவுபடுத்தியது எமது இளம் இலக்கிய வாதிகளின் படைப்புகளில் இந்த மண்ணின் பற்று தெளிவாக தெரிந்தது இந்த மண்ணின் சுதந்திரத்தை ஆவலுடன் நிற்கும் அவர்களது மனவியல்புகள் வெளிப்படையாகத் தெரிந்தது எமது வருங்கால சமூகம் எங்கள் விடுதலைப் போரை எங்கள் தாயக பூமியை போற்றிப் பாதுகாக்கும் என்பதை இதில் பங்குபற்றிய இளம் கலை இலக்கியவாதிகளின் உணர்வுகள் வெளிப்படுத்தியிருக்கிறது. தேசப்பற்றுநிறைந்த இந்த இளம் இலக்கியவாதிகளுக்கு பரிசுகளை வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன்.

இன்று இந்த முத்தமிழ்விழா பல செய்திகளை எங்கள் வருங்கால சந்ததிக்காக சொல்லிச் செல்கிறது உண்மையில் சொல்வதானால், முத்தமிழ் விழா ஒரு வரலாற்றின் பதிவு இது நிகழ்கால நிகழ்ச்சிப் போக்குகளின் சுவடுகளை வருங்காலத்திற்காக விட்டுச் செல்லும் ஓர் மாபெரும் தடயமும் ஆகும். இந்த முத்தமிழ் விழாவில் பல கலைஞர்கள் இணைந்து கொண்டதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தவேளையில், இந்த மண்ணில் வாழும், கலைஞர்கள், அறிஞர்கள், இலக்கியவாதிகள் அனைவரும் இந்த மண்ணின் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்காக - வெற்றிக்காக அவர்களின் துறை வடிவங்களினூடாகப் போராட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன். இந்த முத்தமிழ் விழா மேலும் சிறப்புற வேண்டும் என நான் வாழ்த்துகின்றேன்.

## தபால் அதிபர்கள் சமூகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து தபால், உபதபால் அதிபர்களது கூட்டம் நாளை வெள்ளியன்று காலை 9 மணியளவில் யாழ் தபாலகத்தில் நடைபெறும். அனைவரும் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் புகையிரதக் கடவைக்குமிடையில் நேற்று மாலை பெண்களின் மணிப் பேர்ஸ் ஒன்று ஒரு தொகைப் பணத்துடன் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

### பெரியகட்டுமுனையில்

பில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி கிராமத்திற்குள் நுழைந்து அப்பகுதி முழுவதையும் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர். இங்கிருந்த ஆறுபேரை கைதுசெய்து விசாரணையின் பின் நான்கு பேரை விடுதலை செய்தனர். நாகமணி விஜயகுமார் (வயது 20) வைரமுத்து ஞானம் (வயது26) ஆகிய இருவரும் தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### புலிகள்

பேசிய சபாநாயகர் இந்த நாட்டில் பலம் பொருந்திய தீவிர வாத இயக்கமான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளாத பேச்சு வார்த்தைகளால் எதுவித பயனும் கிடைக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

நாம் விரும்பியோ விரும்பாமலோ தமிழீழ விடுதலைப் புலிகளே இந்த நாட்டில் பலம் பொருந்திய ஒரு அமைப்பாக இருக்கிறது எனவே, அவர்கள் கலந்து கொள்ளாத எந்தவொரு பேச்சு வார்த்தையும் பயனளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

### பல்கலைக்கழக

சாசனத்தின் அங்கீகாரத்துக்காகக் காத்திருக்கிறது

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி, ஆசிரியர் பற்றாக்குறை, ஆய்வு கூடம், கட்டட வசதிகள் ஆகியவற்றைக் கொண்டே தீர்மானிக்கப்படவுள்ளது;

### கோட்டைப்

நோக்கிச் செல்லும் பிரதான வீதிச் சந்தியில் ஒரு மாதிரிக் கோட்டை அமைக்கப்பட்டுள்ளது மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைந்துள்ளது;

காங்கேசன் துறை வீதி, வைத்தியசாலை வீதிச் சந்தி, பண்ணைவீதி, பழைய தபால் கந்தோர் முன்பாக என பல்வேறு இடங்களில் பெரிய சிகரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தபாலகத்திற்கு முன்பாக ஐம்பதடி உயரத்தில் தமிழீழ வரைபடம் ஒன்று அமைக்கப்பட்டு மின்விளக்கால் ஒளியூட்டப்பட்டுள்ளது. இதேபோல அத்தனை சிகரங்களுக்கும் வீதி நெடுகிலும் முற்றவெளி மைதானத்துக்கும்மின்னொளி ஊட்டும் வேலைகள் நேற்று மாலை வரை நடைபெற்ற வண்ணமிருந்தது.

இந்தச் சோடனைகளைப் பார்ப்பதற்கு நேற்று நூற்றுக்கணக்கான மக்கள் யாழ் நகர வீதிகளை நிறைத்து நின்றனர். வீதிகள் எங்கும் வீதி வளைவுகள் ''முத்தமிழ் விழா'' என்று கருத்துப்படங்களுடன் அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் உணர்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது. (வோ)

## தனியார் கல்வி நிறுவனங்களுக்கான

# கோட்ட ரீதியிலான கலந்துரையாடல்

தனியார் கல்வி நிலையங்களின் நடைமுறைப்பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கல்வி நிர்வாகப் பிரிவு தீர்மானித்துள்ளது. கீழ்க் காணப்படும் திகதி, இடம் அடிப்படையில் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சகல தனியார் கல்விநிலையங்களின் உரிமையாளர், பிரத்தியேக வகுப்பு நடத்துபவர்கள் அனைவரையும் தவறாது பங்குகொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்புக் கோட்டம் 13. 6. 91 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/சித்தன்கேணி கணேஸ்வர வித்தியாலய மண்டபம்.

வடமராட்சிக் கோட்டம் 14. 6. 91 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யா/நெல்லியடி ம.மா வித்தியாலய பெண்கள் பிரிவு

தென்மராட்சிக் கோட்டம் 17. 6. 91 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி யா/றிபேக் கல்லூரி மண்டபம்

மருதனார்மடக்கோட்டம் 21. 6. 91 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் ஏவரைற் கல்வி நிலையம்.

யாழ்க்கோட்டம் 24. 6. 91 திங்கட்கிழமை; பிற்பகல் 3 மணிக்கு யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபம்.

# பலாலியில் சிப்பாய் தற்கொலை

பலாலி இராணுவ முகாமில் கோப்பரல் தரத்திலுள்ள சிப்பாய் ஒருவர் சக சிப்பாய் ஒருவரைச் சுட்டபின், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று இரவு இடம் பெற்றது;

கோப்ரல் எட்வின் என்பவரே கோப்ரல் சந்திரதாஸவைச் சுட்டதாகக் கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### மனித உரிமைகள்

போனவர்கள் தொடர்பான புகார்களையும் இக்குழு விசாரிக்கும்

காணாமல் போனவர்கள் பற்றிய சுமார் 1500 முறைப்பாடுகளை ஐ. நா. மனித உரிமைகள்குழு சமர்ப்பித்துள்ளது. உள் நாட்டில் சுமார் 300 முறைப்பாடுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### முத்தமிழ் விழா

தலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பி. எஸ் பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசை நடைபெற்றது இதன் இசையில் ஒருமணி நேரம் மக்கள் திளைத்திருந்தனர்.

8 மணியளவில் வடமராட்சிப் பகுதியின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் அரசண்ணா தலைமையுரை நிகழ்த்தினார் அதனைத்தொடர்ந்து திரண்டிருந்த மக்களின் விண்ணதிரும் கரகோஷத்திற்கு மத்தியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) சிறப்புரை நிகழ்த்தினார்;

மாவீரர் நாள் இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை முதலில் பிரதித்தலைவர் மாத்தயா வழங்கினார். தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி வடமராட்சி அரசியல் இணைப்பாளர் நகுலன் ஆகியோரர் பரிசில்களை வழங்கினர்.

மாவீரர் நாள் நினைவாக நடாத்தப்பட்ட கவிதை, ஓவியம், சிறுகதை, கட்டுரை ஆகியவற்றில் வெற்றிபெற்றோருக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவின் சிறப்புரையும், வழக்காடுமன்றம், குமாரசாமி குழுவினரின் இசைக்கச்சேரியும், உசன் மாணவர் அமைப்பின் 'மீண்டும் எழுவோம்' நாடகமும், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரின் 'நாளை விடியும்' நாடகமும் இடம்பெற்றன; (ச)

# மரண அறிவித்தல்

## கவிஞர்
## திரு செல்லையா கதிரேசர்பிள்ளை

முதுபெரும் கவிஞரும் புராண படன வித்தகரும் செந்தமிழ் பேச்சாளரும், சிறந்த நாடக ஆசிரியருமான கவிஞர் செல்லையா கதிரேசர்பிள்ளை அவர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி) இறைபதமடைந்தார். இவர் திருமதி புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி நிர்மலா (ஆசிரியை சேர். கனகசபை மகா வித்தியாலயம், பன்னாலை), திரு. ஆதவன் (முன்னாள் விரிவுரையாளர், யாழ் வளாகம்) (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ந. பிரபுதேவன் குருக்கள் (சட்டத் தொழில் போதனாசிரியர் யாழ். சிறைச்சாலை), திருமதி மல்லீஸ்வரி (முன்னாள் ஆசிரியை கொண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்) (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்;

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (13-06-91) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லடக்கத்திற்காகக் குரும்பசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
(R/1459)

தகவல்:
ந. பிரபுதேவன்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;